**நில ஆர்ஜித கோருரிமை தீர்ப்பாயம்/**

**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**

**விருதுநகர்  மாவட்டம் (இ) திருவில்லிபுத்தூர்**

**முன்னிலை:-திரு.ஆ.கந்தகுமார், எம்.எல்.,**

**நில ஆர்ஜித கோருரிமை தீர்ப்பாயர்/**

**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி**

**2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் நாள் வியாழக்கிழமை**

**எல்.ஏ.ஓ.பி எண்.581/2022**

**TNVR010012152022**

1.ரெங்கராஜன்
2.ரமேஷ்
3.ராஜம்
4.சூடிகொடுத்தாள்
5.சீதாலட்சுமி
6.சீதாராமன்
7.மங்கை காசிபெருமாள்
8.தனசேகர்
9.சந்திரிகா
10.ராமானுஜம்
11.நவநீதகிருஷ்ணன்
12.கண்ணன்
13.வெங்கட்ராஜன்
14.அனுராதா
15.தனலட்சுமி ...கோருரிமையாளர்கள்.

(7 to 15 claimants added as per order in IA No.2/2024 dated.14.10.2024)
(Amended as per order in IA No.3/24 dated.04.11.2024)

**/எதிர்/**

சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்,
சிப்காட் (நில எடுப்பு)
சாத்தூர். ...நில ஆர்ஜித அதிகாரி.

இந்த நில ஆர்ஜித கோரிக்கை மனு என் முன்பு 15.06.2026 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, கோருரிமையாளர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு.K.ராஜ்மகேந்திரன் ஆஜராகியும், நில ஆர்ஜித அதிகாரி தரப்பில் கூடுதல் அரசு வழக்கறிஞர் (நி.ஆ) திரு.பா.சரவணன் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் சீரிய பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

கோருரிமையாளர்களுக்கு பாத்தியப்பட்ட இழப்பீடு தொகை ரூ.36,71,000/- (17,20,781+19,50,219)ஐ நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய அனுமதி கோரி பிரிவு 10(3) of the Tamil Nadu Acquisition of Lands for Industrial Purpose Act, 1997 (Tamil Nadu Act 1999) & (u/s 64 & 77(2) of RFCTLARR Act, 2013-ன் கீழ் நில ஆர்ஜித அதிகாரியால் இந்த அறிக்கை படிவம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**Reference in brief:-**

2) விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், இ.குமாரலிங்கபுரம் கிராமத்தில் சிப்காட் தொழிற்பூங்கா அமைப்பதற்காக புல எண்.280/7-ல் கண்ட 0.54.5 ஹெக்டேர் (1.35 ஏக்கர்) மற்றும் புல எண்.280/8-ல் கண்ட 0.62.0 ஹெக்டேர் (1.53 ஏக்கர்) புஞ்சை நில எடுப்பு செய்து,

அவசர கால அடிப்படையில் நில எடுப்பு சட்டம் பிரிவு 3(1)ன் கீழான அறிவிக்கை அரசாணை நிலை எண்.176 தொழில்துறை (சிப்காட் நி.எ) நாள்.24.08.2020ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு, நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி புல எண்.280/7–ல் கண்ட 0.54.5 ஹெக்டேர் (1.35 ஏக்கர்) மற்றும் புல எண்.280/8–ல் கண்ட 0.62.0 ஹெக்டேர் (1.53 ஏக்கர்) புஞ்சை நிலம் தொடர்பாக ஆஜர் பட்டாதாரர் ஆழ்வார்சாமி த/பெ வெங்கிடபதி நாயக்கர் என்பவர் காலமாகிவிட்டார் என்று தெரிவித்து அன்னாரின் வாரிசுதாரர்கள் 05.12.2020, 30.12.2020 மற்றும் 04.01.2021 ஆகிய தேதிகளில் தீர்ப்பு விசாரணைக்கு ஆஜராகி மேற்படி நிலங்கள் தங்களது சித்தப்பாவுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என தெரிவித்து, மேற்படி நிலங்கள் சம்பந்தப்பட்ட கிரைய ஆவணமோ, உயில் சாசனமோ தங்கள் கைவசம் இல்லை எனவும், ஆர்ஜிதம் செய்யப்பட்ட புல எண்கள் நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்திற்கு முன்பாக 1962ம் வருடம் வெளியிடப்பட்ட "அ" பதிவேட்டில் அனாதீனம் என தாக்கலாகியுள்ள விபரம் விசாரணையின்போது அறிந்து கொண்டதாகவும், புல எண்கள்.280/7, 280/8 முதலியன UDR திட்டத்திற்கு முன்பு நடப்பிலிருந்த "அ" பதிவேட்டில் "அனாதீனம்" என்று உள்ள பதிவு பின்னாளில் (1985) UDR திட்டத்தின்போது (லேட்) ஆழ்வார்சாமி என்பவர் பெயரில் தாக்கலாகியுள்ளது. அவரது இறப்புக்கு பின்னர் எந்தவொரு பட்டா மாறுதல் செய்யப்பட்டதற்கான ஆவணங்கள் கோருரிமையாளர்களால் தாக்கல் செய்யப்படவில்லை.

3)திரு.ரங்கராஜன் த/பெ (லேட்) ராமானுஜம் என்பவர் ஆஜர் பட்டாதாரராகிய தனது சித்தப்பா (லேட்) ஆழ்வார்சாமி சாலை விபத்தில் 14.02.1994 ல் இறந்தமைக்கு விருதுநகர் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் திரு.ஆர்.வெங்கடபதி த/பெ ராமாஜனும் என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட மோ.வா.வி.கோ.தீ.ம.எண்.36/2002 ல் 27.02.2007 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பின்படி அவ்வழக்கின் மனுதாரராகிய திரு.ஆர்.வெங்கிடபதி த/பெ ராமானுஜம் (1) மற்றும் எதிர்மனுதாரர்கள் வ.எண்.4 காசிபெருமாள் த/பெ ராமானுஜம், வ.எண்.5 – சந்தானகோபாலகிருஷ்ணன் த/பெ (லேட்) ராமாஜனும், வ.எண்.6 ரங்கராஜன் த/பெ (லேட்) ராமானுஜம் ஆகியோருக்கு மேற்படி நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை அடிப்படையில் விபத்தில் இறந்த (லேட்) ஆழ்வார்சாமி என்பவருக்கு தாங்கள் மட்டும் வாரிசுதாரர்கள் என்று தெரிவிப்பது The Hindu Succession Act 2005–ன்படி ஏற்புடையதாக கருத இயலவில்லை. மேற்படி நபர்கள் திருமணமாகாமல் இறந்த (லேட்) ஆழ்வார்சாமி என்பவருக்கு நேரடி வாரிசுதாரர்கள் என ஆவணங்கள் அடிப்படையில் அறியலாகிறது.

4)மேற்சொன்ன சூழ்நிலையில் மேற்படி வழக்கிற்கும், இந்த நில எடுப்புக்குட்பட்ட புஞ்சை நில சொத்துக்களுக்கும் தொடர்பு இல்லாததாலும், முதற்கட்ட விசாரணையில் (லேட்) ஆழ்வார்சாமி என்பவரின் மூத்த சகோதரர் (லேட்) ராமாஜனும் என்பவரின் பெண் வாரிசுதாரர்களின் விபரத்தை மறைத்து அது பின்னாளில் கண்டறியப்பட்டதாலும், கோருரிமையாளர்களின் அநேக நபர்கள் அவர்களது முன்னோர்களின் வாரிசு சான்றுகள் சமர்ப்பிக்காததாலும்

(லேட்) ஆழ்வார்சாமி என்பவரின் வாரிசு சான்று கோருரிமையாளர்களால் தாக்கல் செய்யப்படாததாலும், UDR க்கு முன்னர் புஞ்சை அனாதீனம் நிலம் என பதிவு செய்யப்பட்ட புல எண்.280/7 மற்றும் 280/8 முதலியன கோருரிமையாளர்களால் விசாரணையின்போது நிரூபிக்க இயலாததால் UDR திட்டத்தின்போது தவறுதலாக (லேட்) ஆழ்வார்சாமி பெயரில் தாக்கலாகியுள்ளது என முடிவு செய்வதை தவிர வேறு மார்க்கமில்லை.

5)மேலும் UDR திட்டத்திற்கு முன்னர் "அ" பதிவேடு தயார் செய்யும் சமயம் பட்டா நிலங்களுக்கான பு.எண்.280/4 மற்றும் 280/5–க்கு மட்டும் சென்னை பட்டண 1923ம் வருடத்திய சர்வே பவுண்டரி சட்டம் பிரிவு 9(2)ன் படி வழங்கப்பட்ட நோட்டீஸில் மேற்படி பட்டா நிலங்கள் தவிர நிலங்கள் இடம் பெறவில்லை என்பதிலிருந்து பு.எண்.280/7 மற்றும் 280/8 முதலியன அனாதீனம் என வகைப்பாடு செய்யப்பட்டதை ஆட்சேபித்து ஆஜர் பட்டாதாரர் (லேட்) ஆழ்வார்சாமி உரிய அலுவலர்களிடம் மேல்முறையீடு தாக்கல் செய்து பரிகாரம் பெறாதது உறுதியாகிற சூழ்நிலையில் UDR திட்டத்தில் மேற்படி 280/7 மற்றும் 280/8 முதலியன (லேட்) ஆழ்வார்சாமி பெயரில் தவறுதலாக தாக்கலாகியுள்ளது உறுதியாகிறது. மேலும் இந்நேர்வில் முன்னோர் வாரிசு சான்றுகள் ஏற்கனவே விசாரணையின்போது 12.01.2021க்குள் ஆஜர்படுத்துவதாக உறுதி கூறி அவற்றை சமர்ப்பிக்காததாலும் மற்றும் மூல உரிமையை காட்டும் Title deed நகல் மற்றும் கொடிவழி ஜாபிதா விபரங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில் கோருரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கலாம் என கிராம நிர்வாக அலுவலர் பரிந்துரையை

ஏற்றும், அதுவரை மேற்படி ஆஜர் பட்டாதாரருக்குரிய இழப்பீட்டுத் தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யலாம் என தனி வட்டாட்சியர் சிப்காட் (நி.எ) அலகு–4 பரிந்துரை செய்துள்ளார். மேற்படி பரிந்துரை ஏற்கப்பட்டு, புல எண்.280/7–ல் கண்ட 0.54.5 ஹெக்டேர் (1.35 ஏக்கர்) மற்றும் புல எண்.280/8–ல் கண்ட 0.62.0 ஹெக்டேர் (1.53 ஏக்கர்) நிலத்திற்கான இழப்பீட்டுத் தொகையை நில உரிமைதாரரான ஆழ்வார்சாமி த/பெ வெங்கிடபதி நாயக்கர் என்பவரின் பெயரில் நீதிமன்ற வைப்பீடு செய்ய உத்தரவிட்டதின் அடிப்படையில், இழப்பீடு தொகை ரூ.36,71,000/– (17,20,781+19,50,219) இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டு, ஷை நில ஆர்ஜித மனுவானது நில ஆர்ஜித அதிகாரியால் இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**<u>கோருரிமையாளர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கோரிக்கை மனுவின் சுருக்கம்:–</u>**

6) சாத்தூர் தாலுகா, இ.குமாரலிங்கபுரம் கிராமத்தில் அமைந்துள்ள புல எண் 280/7–ல் ஹெக்டேர் 0.54.5 மற்றும் புல எண் 280/8–ல் ஹெக்டேர் 0.62.0 பரப்பளவு கொண்ட நிலங்கள் ஆழ்வார்சாமி நாயக்கர் என்பவருக்குச் சொந்தமானவையாக இருந்தன. மேற்படி நிலங்கள் தொழில்துறை நோக்கத்திற்காக தமிழ்நாடு அரசால் நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கையின் கீழ் கையகப்படுத்தப்பட்டன. ஆழ்வார்சாமி நாயக்கர் 14.02.1994 அன்று திருமணமாகாத நிலையிலேயே (Bachelor) காலமானார். அவர் உயில் ஏதும் எழுதாமல் (Intestate) இறந்துபோனார். அவருக்கு சட்டபூர்வ வாரிசுகளாக அவரது சகோதரர்கள் (1) வெங்கடபதி, (2)

காசிப்பெருமாள், (3) சந்தான கோபாலகிருஷ்ணன், (4) ரெங்கராஜன் மற்றும் சகோதரிகள் (1) துளசியம்மாள், (2) சீனியம்மாள் ஆகியோர் இருந்தனர். அவர்களில் துளசியம்மாள் 05.09.2019 அன்றும் வெங்கடபதி 18.11.2008 அன்றும் வாரிசுகள் எவருமின்றி காலமானார்கள். சீனியம்மாள் 08.03.2018 அன்று காலமான நிலையில், அவருக்குச் சட்டபூர்வ வாரிசுகளாக (1) ராஜம், (2) கண்ணன், (3) சூடிக்கொடுத்தாள், (4) வெங்கடராஜன், (5) சீதாலட்சுமி, (6) அனுராதா, (7) சீதாராமன் மற்றும் (8) தனலட்சுமி ஆகியோர் உள்ளனர். காசிப்பெருமாள் 16.09.2019 அன்று காலமான நிலையில், அவருக்குச் சட்டபூர்வ வாரிசுகளாக (1) மங்கை, (2) ரமேஷ், (3) சந்திரிகா மற்றும் (4) தனசேகர் ஆகியோர் உள்ளனர். சந்தான கோபாலகிருஷ்ணன் 05.09.2009 அன்று காலமான நிலையில், அவருக்குச் சட்டபூர்வ வாரிசுகளாக (1) ராஜம், (2) ராமானுஜம் மற்றும் (3) நவநீதகிருஷ்ணன் ஆகியோர் உள்ளனர்.

7)கையகப்படுத்தப்பட்ட மேற்படி சொத்துகள் அனைத்தும் ஆழ்வார்சாமி நாயக்கர் அவர்களுக்குச் சொந்தமானவையாகும். அவர் அச்சொத்துகளை முழுமையான உரிமையாளராக (Absolute Owner) அனுபவித்து வந்தார். அவரது உரிமை மற்றும் அனுபவத்தின் அடிப்படையில், மேற்படி சொத்துகளுக்கான பட்டாவும் அவரது பெயரில் வழங்கப்பட்டிருந்தது. ஆழ்வார்சாமி நாயக்கர் உயில் ஏதும் எழுதாமல் காலமானதைத் தொடர்ந்து, மேலே பத்தி 2-ல் குறிப்பிடப்பட்டுள்ள அவரது சட்டபூர்வ வாரிசுகள், அவரது சொத்துகளை சட்டப்படி மரபுரிமையாகப் பெற்று, அவற்றை கூட்டுடைமையாளர்களாக (Co-owners) முழுமையான உரிமையுடன்

அடைந்து அனுபவித்து வருகின்றனர். மேலே பத்தி 2-ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைவரும் மறைந்த ஆழ்வார்சாமி நாயக்கரின் சட்டப்பூர்வ வாரிசுகள் ஆவர். எனவே, அவர்கள் அனைவரும் மேற்படி நில கையகப்படுத்தலுக்கான இழப்பீட்டுத் தொகையைப் பெறுவதற்கு சட்டப்படி உரிமையுடையவர்கள் ஆவர். எனவே, இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள மேற்படி நில கையகப்படுத்தல் இழப்பீட்டுத் தொகையை, மறைந்த ஆழ்வார்சாமி நாயக்கர் அவர்களின் சட்டபூர்வ வாரிசுகளான மேலே குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுக்கு அவரவர் உரிமைக்கேற்ப வழங்கி உத்தரவிட வேண்டுமென பிரார்த்திக்கப்பட்டுள்ளது.

8) தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில்,

**மனுவில் கோரியுள்ள பரிகாரம் கோருரிமையாளர்களுக்கு கிடைக்கத்தக்கதா? இல்லையா?**

என்பதேயாகும்.

9)இம்மனுவில் கோருரிமையாளர்கள் அனைவரும் கோ.சா.1 முதல் கோ.சா.15 ஆக விசாரணை செய்யப்பட்டு, கோ.சா.ஆ.1 முதல் 26 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. நில ஆர்ஜித அதிகாரி தரப்பில் கோ.சா.1 முதல் கோ.சா.15 வரையிலான சாட்சிகளும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளனர். நில ஆர்ஜித அதிகாரி தரப்பில் தனி வட்டாட்சியர் (நி.எ) ஆக பணிபுரிந்து வரும் திரு.சுந்தரமூர்த்தி என்பவர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, எ.ம.சா.ஆ.1 மற்றும் 2 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>பிரச்சினைக்கான தீர்வு:-</u>**

10) இந்த வழக்கில் எதிர்மனுதாரரான சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர், (நில எடுப்பு), சிப்காட், விருதுநகர் மாவட்டம் (இருப்பு) சாத்தூர்/நில ஆர்ஜித அதிகாரியால் விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், இ.குமாரலிங்கபுரம் கிராமத்தில் சிப்காட் தொழிற்பூங்கா அமைப்பதற்காக புல எண்.280/7-ல் கண்ட 0.54.5 ஹெக்டேர் (1.35 ஏக்கர்) மற்றும் புல எண்.280/8-ல் கண்ட 0.62.0 ஹெக்டேர் (1.53 ஏக்கர்) புஞ்சை நிலம் எடுப்பு செய்த நிலத்திற்கான இழப்பீட்டுத் தொகையை நில ஆர்ஜித சட்டம் பிரிவு 10(3) of the Tamil Nadu Acquisition of Lands for Industrial Purpose Act, 1997 (Tamil Nadu Act 1999) & (u/s 64 & 77(2) of RFCTLARR Act, 2013-ன் கீழ் இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. சிப்காட் தொழிற்பூங்கா அமைப்பதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்த வகையில் ஷை நிலத்தினை ஆர்ஜிதம் செய்ததற்கான நஷ்ட ஈடு தொகையை எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளதால், ஷை தொகைக்கு கோருரிமையாளர்கள் உரிமை கோரியுள்ளனர்.

11) இந்த வழக்கில் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த 05.03.2021ம் தேதிய அவார்டு எண்.13/2021ல் 39 முதல் 45 வரையிலான பக்கத்தில் சர்வே எண்கள்.280/7 மற்றும் 280/8-க்கான ஆஜர் பட்டாதாரர் ஆழ்வார்சாமி த/பெ வெங்கிடபதி நாயக்கர் என்பவர் காலமாகிவிட்டார் என்று தெரிவித்து அன்னாரின் வாரிசுதாரர்கள் 05.12.2020, 30.12.2020 மற்றும் 04.01.2021 ஆகிய தேதிகளில் தீர்ப்பு விசாரணைக்கு ஆஜராகி மேற்படி நிலங்கள் தங்களது சித்தப்பாவுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என தெரிவித்து, மேற்படி நிலங்கள்

சம்பந்தப்பட்ட கிரைய ஆவணமோ, உயில் சாசனமோ தங்கள் கைவசம் இல்லை எனவும், ஆர்ஜிதம் செய்யப்பட்ட புல எண்கள் நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்திற்கு முன்பாக 1962ம் வருடம் வெளியிடப்பட்ட "அ" பதிவேட்டில் அனாதீனம் என தாக்கலாகியுள்ள விபரம் விசாரணையின்போது அறிந்து கொண்டதாகவும், புல எண்கள்.280/7, 280/8 முதலியன UDR திட்டத்திற்கு முன்பு நடப்பிலிருந்த "அ" பதிவேட்டில் "அனாதீனம்" என்று உள்ள பதிவு பின்னாளில் (1985) UDR திட்டத்தின்போது (லேட்) ஆழ்வார்சாமி என்பவர் பெயரில் தாக்கலாகியுள்ளது. அவரது இறப்புக்கு பின்னர் எந்தவொரு பட்டா மாறுதல் செய்யப்பட்டதற்கான ஆவணங்கள் கோருரிமையாளர்களால் தாக்கல் செய்யப்படவில்லை.

12)திரு.ரங்கராஜன் த/பெ (லேட்) ராமானுஜம் என்பவர் ஆஜர் பட்டாதாரராகிய தனது சித்தப்பா (லேட்) ஆழ்வார்சாமி சாலை விபத்தில் 14.02.1994 ல் இறந்தமைக்கு விருதுநகர் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் திரு.ஆர்.வெங்கடபதி த/பெ ராமாஜனும் என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட மோ.வா.வி.கோ.தீ.ம.எண்.36/2002 ல் 27.02.2007 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பின்படி அவ்வழக்கின் மனுதாரராகிய திரு.ஆர்.வெங்கிடபதி த/பெ ராமானுஜம் (1) மற்றும் எதிர்மனுதாரர்கள் வ.எண்.4 காசிபெருமாள் த/பெ ராமானுஜம், வ.எண்.5 – சந்தானகோபாலகிருஷ்ணன் த/பெ (லேட்) ராமாஜனும், வ.எண்.6 ரங்கராஜன் த/பெ (லேட்) ராமானுஜம் ஆகியோருக்கு மேற்படி நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை அடிப்படையில் விபத்தில் இறந்த (லேட்) ஆழ்வார்சாமி என்பவருக்கு தாங்கள் மட்டும் வாரிசுதாரர்கள் என்று தெரிவிப்பது The Hindu

Succession Act 2005-ன்படி ஏற்புடையதாக கருத இயலவில்லை. மேற்படி நபர்கள் திருமணமாகாமல் இறந்த (லேட்) ஆழ்வார்சாமி என்பவருக்கு நேரடி வாரிசுதாரர்கள் என ஆவணங்கள் அடிப்படையில் அறியலாகிறது.

13)மேற்சொன்ன சூழ்நிலையில் மேற்படி வழக்கிற்கும், இந்த நில எடுப்புக்குட்பட்ட புஞ்சை நில சொத்துக்களுக்கும் தொடர்பு இல்லாததாலும், முதற்கட்ட விசாரணையில் (லேட்) ஆழ்வார்சாமி என்பவரின் மூத்த சகோதரர் (லேட்) ராமாஜனும் என்பவரின் பெண் வாரிசுதாரர்களின் விபரத்தை மறைத்து அது பின்னாளில் கண்டறியப்பட்டதாலும், கோருரிமையாளர்களின் அநேக நபர்கள் அவர்களது முன்னோர்களின் வாரிசு சான்றுகள் சமர்ப்பிக்காததாலும் (லேட்) ஆழ்வார்சாமி என்பவரின் வாரிசு சான்று கோருரிமையாளர்களால் தாக்கல் செய்யப்படாததாலும், UDR க்கு முன்னர் புஞ்சை அனாதீனம் நிலம் என பதிவு செய்யப்பட்ட புல எண்.280/7 மற்றும் 280/8 முதலியன கோருரிமையாளர்களால் விசாரணையின்போது நிரூபிக்க இயலாததால் UDR திட்டத்தின்போது தவறுதலாக (லேட்) ஆழ்வார்சாமி பெயரில் தாக்கலாகியுள்ளது என முடிவு செய்வதை தவிர வேறு மார்க்கமில்லை.

14)மேலும் UDR திட்டத்திற்கு முன்னர் "அ" பதிவேடு தயார் செய்யும் சமயம் பட்டா நிலங்களுக்கான பு.எண்.280/4 மற்றும் 280/5-க்கு மட்டும் சென்னை பட்டண 1923ம் வருடத்திய சர்வே பவுண்டரி சட்டம் பிரிவு 9(2)ன் படி வழங்கப்பட்ட நோட்டீஸில் மேற்படி பட்டா நிலங்கள் தவிர நிலங்கள் இடம் பெறவில்லை என்பதிலிருந்து பு.எண்.280/7 மற்றும் 280/8 முதலியன அனாதீனம்

என வகைப்பாடு செய்யப்பட்டதை ஆட்சேபித்து ஆஜர் பட்டாதாரர் (லேட்) ஆழ்வார்சாமி உரிய அலுவலர்களிடம் மேல்முறையீடு தாக்கல் செய்து பரிகாரம் பெறாதது உறுதியாகிற சூழ்நிலையில் UDR திட்டத்தில் மேற்படி 280/7 மற்றும் 280/8 முதலியன (லேட்) ஆழ்வார்சாமி பெயரில் தவறுதலாக தாக்கலாகியுள்ளது உறுதியாகிறது. மேலும் இந்நேர்வில் முன்னோர் வாரிசு சான்றுகள் ஏற்கனவே விசாரணையின்போது 12.01.2021 க்குள் ஆஜர்படுத்துவதாக உறுதி கூறி அவற்றை சமர்ப்பிக்காததாலும் மற்றும் மூல உரிமையை காட்டும் Title deed நகல் மற்றும் கொடிவழி ஜாபிதா விபரங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில் கோருரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கலாம் என கிராம நிர்வாக அலுவலர் பரிந்துரையை ஏற்றும், அதுவரை மேற்படி ஆஜர் பட்டாதாரருக்குரிய இழப்பீட்டுத் தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யலாம் என தனி வட்டாட்சியர் சிப்காட் (நி.எ) அலகு-4 பரிந்துரை செய்துள்ளார். மேற்படி பரிந்துரை ஏற்கப்பட்டு, புல எண்.280/7-ல் கண்ட 0.54.5 ஹெக்டேர் (1.35 ஏக்கர்) மற்றும் புல எண்.280/8-ல் கண்ட 0.62.0 ஹெக்டேர் (1.53 ஏக்கர்) நிலத்திற்கான இழப்பீட்டுத் தொகையை நில உரிமைதாரரான ஆழ்வார்சாமி த/பெ வெங்கிடபதி நாயக்கர் என்பவரின் பெயரில் நீதிமன்ற வைப்பீடு செய்ய உத்தரவிட்டதின் அடிப்படையில், இழப்பீடு தொகை ரூ.36,71,000/- (17,20,781+19,50,219) இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

15)1ம் கோருரிமையாளரான ரெங்கராஜன் என்பவர் கோ.சா.1 ஆகவும், 3ம் கோருரிமையாளரான ராஜம் என்பவர்

கோ.சா.2 ஆகவும், 4 ம் கோருரிமையாளரான சூடிக்கொடுத்தாள் என்பவர் கோ.சா.3 ஆகவும், 5 ம் கோருரிமையாளரான சீதாலெட்சுமி என்பவர் கோ.சா.4 ஆகவும், 6 ம் கோருரிமையாளரான சீதாராமன் என்பவர் கோ.சா.5 ஆகவும், 7 ம் கோருரிமையாளரான மங்கை காசிபெருமாள் என்பவர் கோ.சா.6 ஆகவும், 8 ம் கோருரிமையாளரான தனசேகர் என்பவர் கோ.சா.7 ஆகவும், 10 ம் கோருரிமையாளரான ராமானுஜம் என்பவர் கோ.சா.8 ஆகவும், 11 ம் கோருரிமையாளரான நவநீதகிருஷ்ணன் என்பவர் கோ.சா.9 ஆகவும், 12 ம் கோருரிமையாளரான கண்ணன் என்பவர் கோ.சா.10 ஆகவும், 14 ம் கோருரிமையாளரான அனுராதா என்பவர் கோ.சா.11 ஆகவும், 15 ம் கோருரிமையாளரான தனலட்சுமி என்பவர் கோ.சா.12 ஆகவும், 13 ம் கோருரிமையாளரான வெங்கட்ராஜன் என்பவர் கோ.சா.13 ஆகவும், 9 ம் கோருரிமையாளரான சந்திரிகா என்பவர் கோ.சா.14 ஆகவும், 2 ம் கோருரிமையாளரான ரமேஷ் என்பவர் கோ.சா.15 ஆகவும் சாட்சியமளித்து பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்து, அவர்களது கோரிக்கை ஸ்டேட்மெண்ட்டில் உள்ள விவரங்களை எடுத்துச் சொல்லியும், மொத்த நஷ்ட ஈட்டுத் தொகையான ரூ.36,71,000/−ல் 1 ம் கோருரிமையாளருக்கு ரூ.9,17,750/−ம், 2 மற்றும் 7 கோருரிமையாளர்களுக்கு தலா ரூ.2,29,438/− வீதமும், 3 ம் கோருரிமையாளருக்கு ரூ.4,20,636/−ம், 4, 5, 6, 12 மற்றும் 13 ஆகிய கோருரிமையாளர்களுக்கு தலா ரூ.1,14,719/− வீதமும், 8 மற்றும் 9 கோருரிமையாளர்களுக்கு தலா ரூ.2,29,437/− வீதமும், 10 ம் கோருரிமையாளருக்கு ரூ.3,05,917/−ம், 11 ம் கோருரிமையாளருக்கு ரூ.3,05,916/ம், 14 மற்றும் 15 வது கோருரிமையாளர்களுக்கு தலா

ரூ.1,14,718/– வீதமும் தங்களுக்கு கிடைக்கக்கூடியது என்றும் தெரிவித்துள்ளனர். மேலும் கோ.சா.ஆ.1 முதல் 26 வரையிலான ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளனர்.

16)ஆர்ஜிதம் செய்யப்பட்ட சர்வே எண்கள்.280/7 மற்றும் 280/8–க்கான பட்டாதாரர் ஆழ்வார்சாமி த/பெ வெங்கிடபதி நாயக்கர் எனவும், மேற்படி நிலமானது UDR–லிருந்து நாளது தேதிவரை ஆழ்வார்சாமி என்பவர் பெயரிலேயே தாக்கலாகி இருந்ததையும் நில ஆர்ஜித அதிகாரி பிறப்பித்த உத்தரவின் மூலம் தெரியவருகிறது. மேற்படி ஆஜர் பட்டாதாரர் ஆழ்வார்சாமி என்பவர் 14.02.1994 அன்று காலமாகிவிட்டார் என தெரிவித்து அன்னாரின் வாரிசுகளான இந்த மனுவின் கோருரிமையாளர்கள் அனைவரும் 30.12.2020 அன்று தீர்ப்பு விசாரணைக்கு ஆஜராகி ஆழ்வார்சாமியின் இறப்புச் சான்று நகலை சமர்ப்பித்துள்ளனர் என்பதையும், வாரிசு சான்றினை 12.01.2021–க்குள் சமர்ப்பிக்கவில்லை என்பதினால், ஆஜர் பட்டாதாரர் ஆழ்வார்சாமி த/பெ வெங்கிடபதி நாயக்கர் என்பவரின் பெயரிலேயே இழப்பீடு தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய உத்தரவிடப்பட்டிருப்பதையும் அறிய முடிகிறது. மேற்படி நிலம் கோருரிமையாளர்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்பதால் நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பட்டா நகலை தவிர வேறு ஆவணங்கள் எதுவும் அவர்கள் கைவசம் இல்லை என்று சொல்லியிருப்பதும் தெரிய வருகிறது. இந்த சங்கதிகளை பொறுத்து நில ஆர்ஜித அதிகாரி தரப்பில் எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கப்படவில்லை.

17)இவ்வாறான நிலையில், எதிர்மனுதாரரான நில ஆர்ஜித அதிகாரி தரப்பில் ஆர்ஜிதம் செய்யப்பட்ட புல எண்கள்.280/7 மற்றும் 280/8 முதலியன UDR திட்டத்திற்கு முன்பு நடப்பிலிருந்த "அ" பதிவேட்டில் "அனாதீனம்" என்று உள்ள பதிவு, பின்னாளில் (1985) UDR திட்டத்தின்போது ஆழ்வார்சாமி என்பவர் பெயரில் தவறுதலாக தாக்கலாகியுள்ளது என்றும் எனவே, அனாதீனம் என வகைப்பாடு செய்யப்பட்டதை ஆட்சேபித்து ஆஜர் பட்டாதாரர் ஆழ்வார்சாமி உரிய அலுவலர்களிடம் மேல்முறையீடு தாக்கல் செய்து பரிகாரம் பெறவில்லை என்பதினால், ஆர்ஜித நிலத்திற்குண்டான இழப்பீடு தொகை இந்த மனுவின் கோருரிமையாளர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

18)மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் தனி வட்டாட்சியர் (நி.எ) ஆக பணிபுரிந்து வரும் சுந்தரமூர்த்தி என்பவர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டிருக்கிறார். அவர் தன்னுடைய நிரூபண உரையில், இவ்வழக்கில் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் நிலவுடைமை மேம்பாட்டுத்திட்டத்திற்கு முந்தைய "அ" பதிவேட்டில் அனாதீனம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அதனை காட்டக்கூடிய "அ" பதிவேட்டின் நகல் எ.ம.சா.ஆ.1 ஆகும். ஆனால் நிலவுடைமை மேம்பாட்டுத் திட்டத்தின்போது தவறுதலாக ஆழ்வார்சாமி என்பவர் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது. அந்த பட்டாவும் ஆழ்வார்சாமி இறந்தபின்பு பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்பதற்கு எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை. ஆர்ஜித நிலங்களுக்குண்டான பட்டா ஆழ்வார்சாமி பெயரில் இருந்தபோதிலும்

ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்கள் எப்படி ஆழ்வார்சாமி பெயருக்கு வந்தது என்பதற்குரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கவில்லை என்பதால், ஆர்ஜித நிலத்திற்குண்டான இழப்பீட்டுத் தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யும்பொருட்டு 05.03.2021ம் தேதி தீர்வம் எண்.13/2021 பிறப்பிக்கப்பட்டது. மேற்படி தீர்வத்தின் நகல் எ.ம.சா.ஆ.2 ஆகும். ஆர்ஜித நிலங்களுக்கும், ஆழ்வார்சாமி நாயக்கருக்கும் எவ்விதமான சம்மந்தமும் கிடையாது. ஆழ்வார்சாமி நாயக்கர் பெயரில் நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின்போது தவறுதலாக வழங்கப்பட்ட பட்டாவின் அடிப்படையில் கோருரிமையாளர்கள் உரிமை கோருவது கோருரிமையாளர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் தெரிவித்திருக்கிறார்.

19)கோருரிமையாளர்கள் தரப்பில் எ.ம.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்பட்டிருக்கிறார். அவர் தன்னுடைய குறுக்கு விசாரணையில்,

> "நிலவுடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 1985ம் ஆண்டு நிலங்களுக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு பட்டா வழங்கும்போது நிலங்களை அனுபவித்து வருபவர்கள் பற்றி விசாரணை செய்துதான் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். எஸ்.எல்.ஆர்–ல் எதன் அடிப்படையில் அனாதீனம் என வகைப்பாடு செய்யப்பட்டது என்ற விபரம் நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.1 ஆவணத்தில் துலங்காது என்றால் சரிதான். ஆழ்வார்சாமி என்பவர் பெயருக்கு தவறுதலாக வழங்கப்பட்டதாக கூறும் நிலையில் ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றால் சரிதான்."

என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்.

20)மேலும் கோருரிமையாளர்கள் தரப்பில் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் அனாதீனம் என்று வகைப்பாடு செய்யப்பட்டிருந்தாலும், Section 6 of the Patta Pass Book Act, 1983-ல் சொல்லியுள்ளவாறு, பட்டா பாஸ் புத்தகத்தில் செய்யப்பட்டுள்ள பதிவுகள், உரிமைக்கான முதற்கட்ட ஆதாரமாக (Prima Facie Evidence) ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும் என்றும் அதனடிப்படையில் இவ்வழக்கில் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்குண்டான இழப்பீட்டுத் தொகை இந்த மனுவின் கோருரிமையாளர்களுக்கு கிடைக்கத்தக்கது என்று வாதிட்டு, நமது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் **2025-2 Writ L.R.807 & 2026-1 Writ L.R.773** ஆகிய முன்தீர்ப்புகள் கோடிட்டு காட்டப்பட்டது. அதில் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டிருக்கிறது.

**Section 4 of Patta Pass Book Act, 1983**

"4. Presumption of correctness of entries in the patta pass book. -The entries in the patta pass book and the certified copy of entries in the patta pass book shall be presumed to be true and correct until the contrary is proved or a new entry is lawfully substituted therefor."

**Section 6 of the Patta Pass Book Act, 1983**

"6. Entries in the patta pass book to be prima facie evidence of title. - The entries in the patta pass book issued by the Tahsildar under section 3 shall be prima facie evidence of title of the person in whose name the patta pass book has been issued to the parcels of land entered in

the patta pass book, free of any prior encumbrance, unless otherwise specified therein."

21) ஆகவே, **Section 4 of Patta Pass Book Act, 1983**-ல் பட்டா கணக்குப் புத்தகத்தில் உள்ள பதிவுகளும், அந்தப் பதிவுகளின் சான்றளிக்கப்பட்ட நகல்களும், அதற்கு முரணானது என்று நிரூபிக்கப்படும் வரையிலோ அல்லது அதற்குப் பதிலாக ஒரு புதிய பதிவு சட்டப்பூர்வமாக மாற்றியமைக்கப்படும் வரையிலோ, அவை உண்மையானவை மற்றும் சரியானவை என்றே அனுமானிக்கப்பட வேண்டும் என்று சொல்லியுள்ள நிலையில், UDR திட்டத்தின்போது தவறுதலாக ஆழ்வார்சாமி பெயரில் பட்டா தாக்கலாகியுள்ளது என்றும் அவ்வாறு ஆழ்வார்சாமி என்பவர் பெயருக்கு தவறுதலாக பட்டா வழங்கப்பட்டதாக கூறும் நிலையில், அதனை ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றால் சரிதான் என்று எ.ம.சா.1 தன்னுடைய குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டிருக்கிறார். மேலும் எ.ம.சா.1 தன்னுடைய குறுக்கு விசாரணையின்போது, நிலவுடைமை மேம்பாட்டு திட்டத்தின்போது வழங்கப்பட்ட ரயத்துவாரி பட்டாவில் கண்ட இடங்களை அரசுக்காக ஆர்ஜிதம் செய்யும்போது ஆஜர் பட்டாதாரர்களுக்கு இழப்பீடு தொகை வழங்க தேவையில்லை என விதிகளில் உள்ளது என்று தெரிவித்திருந்தாலும், அதனை நிரூபிக்கும் வகையில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இவ்வாறான நிலையில், இவ்வழக்கின் ஆர்ஜித நிலங்களுக்கு ஆழ்வார்சாமி பெயரில் நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின்போது வழங்கப்பட்ட பட்டா உண்மையானவை மற்றும் சரியானவை என்று முடிவு

செய்யப்படுகிறது.

22)இந்த வழக்கில் Ex.C1 ஆக 15.06.1965 ஆம் தேதியிட்ட ஆர்ஜித நிலங்களை பொறுத்து ஆழ்வார்சாமி நாயக்கர் பெயருக்கு வழங்கப்பட்ட பட்டா எண்.50 ன் நகலும், Ex.C2 ஆக ஆர்ஜித சொத்துக்களுக்கு 1962 முதல் 1985 ம் ஆண்டு வரை ஆழ்வார்சாமி நாயக்கர் செலுத்திய தீர்வை ரசீதுகளின் நகலும், Ex.C3 ஆக ஆர்ஜித சொத்துக்களுக்கு நில உடைமை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ஆழ்வார்சாமி நாயக்கர் பெயருக்கு வழங்கப்பட்ட பட்டா எண்.48 ன் நகலும், Ex.C4 ஆக ஆர்ஜித சொத்துக்களுக்கு 1985 ம் ஆண்டுக்கு பின்பு ஆழ்வார்சாமி நாயக்கர் செலுத்திய தீர்வை ரசீதுகளின் நகலும், Ex.C5 ஆக ஆர்ஜித சொத்துக்களுக்கு இ.குமாரலிங்கபுரம் கிராம நிர்வாக அதிகாரி ஆழ்வார்சாமி நாயக்கர் பெயரில் வழங்கிய செட்டில்மெண்ட் ஜமாபந்தி சிட்டா நம்பர் 48 ன் நகலும், Ex.C6 ஆக ஆர்ஜித சொத்துக்களுக்கு ஆழ்வார்சாமி நாயக்கர் பெயரிலுள்ள UDR பட்டா எண்.48 ன் நகலும், Ex.C7 ஆக ஆர்ஜித சொத்துக்களுக்கு ஆழ்வார்சாமி நாயக்கர் பெயரிலுள்ள "அ" பதிவேட்டின் நகலும் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. Ex.C8 ஆக ஆஜர் பட்டாதாரர் ஆழ்வார்சாமி நாயக்கரின் இறப்புச்சான்றிதழ் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனை பார்க்கும்போது, மேற்படி ஆழ்வார்சாமி நாயக்கர் 14.02.1994 அன்று இறந்துவிட்டதை அறிய முடிகிறது. Ex.C9 ஆக வெங்கடபதி நாயக்கரின் இறப்புச்சான்றிதழ் நகல் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அதில் மேற்படி வெங்கடபதி நாயக்கர் 18.11.2008 அன்று இறந்துபோன விபரம் தெரிய வருகிறது. Ex.C10 ஆக வருவாய்த்துறையினரால் வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழின்

நகல் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அதில் இறந்துபோன வெங்கடபதி நாயக்கர் என்பவருக்கு அவரது மனைவியான சுப்புலட்சுமி மட்டும் வாரிசுதாரர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

23)Ex.C11 ஆக சுப்புலட்சுமியின் இறப்பு சான்றிதழ் நகல் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அதில் மேற்படி சுப்புலட்சுமி 02.04.2015 அன்று இறந்துவிட்டதை அறிய முடிகிறது. Ex.C12 ஆக காசிபெருமாளின் இறப்பு சான்றிதழ் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் மேற்படி காசிபெருமாள் 16.09.2019 அன்று இறந்துபோன விபரம் தெரிய வருகிறது. Ex.C13 ஆக Vashi Civil Court காசிபெருமாள் என்பவருக்கு வழங்கிய வாரிசு சான்றிதழ் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் (1) மங்கை (2) ரமேஷ் (3) தனசேகர் மற்றும் (4) சந்திரிகா ஆகியோர்கள் மேற்படி காசிபெருமாளுக்கு சட்டப்பூர்வமான வாரிசுகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. Ex.C14 ஆக சந்தன கோபாலகிருஷ்ணன் என்பவரின் இறப்பு சான்றிதழ் நகல் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அதில் மேற்படி சந்தன கோபாலகிருஷ்ணன் 05.09.2009 அன்று இறந்துவிட்டதை அறிய முடிகிறது. Ex.C15 ஆக வருவாய்த்துறையினரால் வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழ் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனை பார்க்கும்போது, இறந்துபோன சந்தன கோபாலகிருஷ்ணன் என்பவருக்கு (1) ராஜம் (2) ராமானுஜம் (3) நவநீதகிருஷ்ணன் ஆகியோர்கள் வாரிசுதாரர்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. Ex.C16 ஆக சடகோபாலன் என்பவரின் இறப்பு சான்றிதழ் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் மேற்படி சடகோபாலன் என்பவர் 26.07.2018 அன்று இறந்துவிட்டதை அறிய முடிகிறது.

24) Ex.C17 ஆக வருவாய்த்துறையினரால் வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழ் நகல் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அதில் இறந்துபோன சடகோபாலன் என்பவருக்கு அவரது மனைவியான துளசியம்மாள் மட்டும் வாரிசுதாரர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. Ex.C18 ஆக துளசியம்மாள் என்பவரின் இறப்பு சான்றிதழ் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் மேற்படி துளசியம்மாள் என்பவர் 02.09.2019 அன்று இறந்துவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. Ex.C19 ஆக சீனியம்மாள் என்பவரின் இறப்பு சான்றிதழ் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் மேற்படி சீனியம்மாள் என்பவர் 07.03.2018 அன்று இறந்துவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. Ex.C20 ஆக வருவாய்த்துறையினரால் வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழ் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனை பரிசீலனை செய்யும்போது, இறந்துபோன சீனியம்மாள் என்பவருக்கு (1) ராஜம் (2) சூடிக்கொடுத்தாள் (3) கண்ணன் (4) சீதாலட்சுமி (5) வெங்கட்ராஜன் (6) சீதாராமன் (7) அனுராதா (8) தனலட்சுமி ஆகியோர்கள் வாரிசுதாரர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் Ex.C20–ல் மேற்படி சீனியம்மாள் கணவரான கோவிந்தசாமி மற்றும் சீனியம்மாளின் பெற்றோர்களான ராமானுஜம், தாயம்மாள் ஆகியோர் ஏற்கனவே இறந்துவிட்டனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

25) Ex.C21 ஆக கோவிந்தசாமி என்பவரின் இறப்பு சான்றிதழ் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் மேற்படி கோவிந்தசாமி என்பவர் 07.01.2012 அன்று இறந்துவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. காலஞ்சென்ற ஆழ்வார்சாமி என்பவருக்கு இந்த மனுவின் கோருரிமையாளர்கள் மட்டுமே சட்டப்பூர்வமான வாரிசுதாரர்கள் என்று

விளம்புகை செய்யக்கோரி இந்த மனுவின் கோருரிமையாளர்களால் சாத்தூர், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.95/2023 தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. மேற்படி வழக்கில் முழு விசாரணைக்கு பின்பு, இந்த மனுவின் 1 முதல் 15 வரையிலான கோருரிமையாளர்கள் மட்டுமே ஆழ்வார்சாமிக்கு சட்டப்பூர்வமான வாரிசுதாரர்கள் என்று விளம்புகை செய்து 26.04.2024 ஆம் தேதியன்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் Ex.C22 ஆகவும், தீர்ப்பாணையின் நகல் Ex.C23 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. மேற்படி Ex.C22 தீர்ப்பு மற்றும் Ex.C23 தீர்ப்பணையின் அடிப்படையில், இறந்துபோன ஆஜர் பட்டாதாரர் ஆழ்வார்சாமிக்கு வருவாய்த்துறையினரால் வழங்கப்பட்ட வாரிசுரிமைச்சான்றிதழ் நகல் Ex.C24 ஆக தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அதனை பரிசீலனை செய்யும்போது, மேற்படி ஆழ்வார்சாமிக்கு இந்த மனுவின் 1 முதல் 15 வரையிலான கோருரிமையாளர்கள் வாரிசுதாரர்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த மனுவின் கோருரிமையாளர்களின் குடும்ப கொடிவழி ஜாபிதா நகல் Ex.C25 ஆகவும், 1ம் கோருரிமையாளரின் ஆதார் அட்டையின் நகல் Ex.C26 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

26) மேலே விவரித்த வகையில், மேற்படி ஆழ்வார்சாமி என்பவருக்கு இந்த மனுவின் 1 முதல் 15 வரையிலான கோருரிமையாளர்கள் சட்டப்பூர்வமான வாரிசுகள் என்பது Ex.C22, Ex.C23 மற்றும் Ex.C24 ஆகிய ஆவணங்களின் பரிசீலனையிலிருந்து தெரிய வருகிறது. மேற்படி ஆழ்வார்சாமி

இறந்த உடனேயே அவருக்குப் பாத்தியப்பட்ட அனைத்து சொத்துக்களையும் இந்த மனுவின் 1 முதல் 15 வரையிலான கோருரிமையாளர்கள் சர்வ சுதந்திர பாத்தியமாய் அடைந்து யாருடைய இன்னலும், இடைஞ்சலும் இல்லாமல் வெளிப்படையாக அனுபவம் செய்து வந்துள்ளனர் என்பதும், அதேபோல தாவா நில ஆர்ஜித சொத்தையும், இந்த கோருரிமையாளர்களே அடைந்து அனுபவம் செய்து வந்துள்ளனர் என்பதும் தெரிய வருகிறது.

27) மேலும் நில ஆர்ஜித அதிகாரி தரப்பில் கோ.சா.1 முதல் கோ.சா.15 வரையிலான சாட்சிகள் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் தங்களுடைய குறுக்கு விசாரணையில்,

"இவ்வழக்கில் கண்ட நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு அறிவிப்பு வந்தபோது இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ள கோ.சா.ஆ.1 முதல் கோ.சா.ஆ.26 வரையிலான ஆவணங்களை ஆர்ஜித அதிகாரி முன்பு ஆஜர்படுத்தவில்லை என்று சொன்னால் சரிதான். ஆழ்வார்சாமியின் இறப்பை பொறுத்து எதிர்மனுதாரர் கோரிக்கையை நிராகரித்த பின்பு தான் ஆழ்வார்சாமியின் 2ம் நிலை வாரிசுகள் நானும், இந்நிர் வழக்கின் இதர கோருரிமையாளர்கள் என்றும் தீர்ப்பு பெற்றுள்ளோம் என்றால் சரிதான். ஆர்ஜித அதிகாரி ஆர்ஜித நிலம் செட்டில்மெண்ட் காலத்தில் அனாதீனம் வகைப்பாடு செய்யப்பட்டிருந்தது. தவறுதலாக ஆழ்வார்சாமி பெயரில் நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின்படி பட்டா ஏற்படுத்தப்பட்டதால்தான் ஆர்ஜித நிலத்திற்கு உண்டான இழப்பீட்டு தொகையை நீதிமன்றத்தில்

வைப்பீடு செய்தார் என்றால் சரியல்ல."

என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

28)மேலும் நில ஆர்ஜித அதிகாரி தரப்பில் நிலவுடைமை மேம்பாட்டு திட்டத்தின்போது வழங்கப்பட்ட ரயத்துவாரி பட்டாவில் கண்ட இடங்களை அரசுக்காக ஆர்ஜிதம் செய்யும்போது ஆஜர் பட்டாதாரர்களுக்கு இழப்பீடு தொகை வழங்க தேவையில்லை என விதிகளில் உள்ளது என்று தெரிவித்திருந்தாலும், அதனை நிரூபிக்கும் வகையில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படாத நிலையிலும். ஆர்ஜித நிலங்களுக்கு ஆழ்வார்சாமி பெயரில் நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின்போது வழங்கப்பட்ட பட்டா உண்மையானவை மற்றும் சரியானவை என்று முடிவு செய்யப்பட்டுள்ள நிலையிலும், மேற்படி ஆர்ஜித நிலம் இந்த மனுவின் 1 முதல் 15 கோருரிமையாளர்களுக்கும் பாத்தியப்பட்டது என்பது தெரிய வருகிற நிலையிலும், அதேவேளையில் ஆர்ஜித நிலத்தைப் பொறுத்து இந்த மனுவின் கோருரிமையாளர்களை தவிர வேறு யாரும் உரிமை கோரவில்லை என்ற நிலையிலும், நில எடுப்பு அலுவலர் தரப்பில் ஆர்ஜித புல எண்.280/7-ல் கண்ட 0.54.5 ஹெக்டேர் (1.35 ஏக்கர்) மற்றும் புல எண்.280/8-ல் கண்ட 0.62.0 ஹெக்டேர் (1.53 ஏக்கர்) நிலத்திற்கு நஷ்ட ஈடாக வழங்கிய மொத்த நஷ்ட ஈடு தொகை ரூ.36,71,000/- (17,20,781+19,50,219)-ல் 1ம் கோருரிமையாளருக்கு ரூ.9,17,750/-ம், 2 மற்றும் 7 கோருரிமையாளர்களுக்கு தலா ரூ.2,29,438/- வீதமும், 3ம் கோருரிமையாளருக்கு ரூ.4,20,636/-ம், 4, 5, 6, 12 மற்றும் 13 ஆகிய கோருரிமையாளர்களுக்கு தலா ரூ.1,14,719/- வீதமும், 8 மற்றும் 9

கோருரிமையாளர்களுக்கு தலா ரூ.2,29,437/– வீதமும், 10ம் கோருரிமையாளருக்கு ரூ.3,05,917/–ம், 11ம் கோருரிமையாளருக்கு ரூ.3,05,916/ம், 14 மற்றும் 15வது கோருரிமையாளர்களுக்கு தலா ரூ.1,14,718/– வீதமும் இந்த மனுவின் 1 முதல் 15 கோருரிமையாளர்களுக்கு கிடைக்கக்கூடியது என்று இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

29) முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு, நில ஆர்ஜித அதிகாரியால் தீர்வம் எண்.13/2021 நாள்.05.03.2021–ன் படி இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள மொத்த நஷ்ட ஈடு தொகை ரூ.36,71,000/– (17,20,781+19,50,219)–ல் 1ம் கோருரிமையாளருக்கு ரூ.9,17,750/–ம், 2 மற்றும் 7 கோருரிமையாளர்களுக்கு தலா ரூ.2,29,438/– வீதமும், 3ம் கோருரிமையாளருக்கு ரூ.4,20,636/–ம், 4, 5, 6, 12 மற்றும் 13 ஆகிய கோருரிமையாளர்களுக்கு தலா ரூ.1,14,719/– வீதமும், 8 மற்றும் 9 கோருரிமையாளர்களுக்கு தலா ரூ.2,29,437/– வீதமும், 10ம் கோருரிமையாளருக்கு ரூ.3,05,917/–ம், 11ம் கோருரிமையாளருக்கு ரூ.3,05,916/ம், 14 மற்றும் 15வது கோருரிமையாளர்களுக்கு தலா ரூ.1,14,718/– வீதமும் இந்த மனுவின் 1 முதல் 15 கோருரிமையாளர்களுக்கு கிடைக்கக்கூடியது என்றும் மேற்படி இழப்பீட்டுத் தொகை மற்றும் அதற்குரிய வட்டித் தொகை முழுவதையும் 1 முதல் 15 கோருரிமையாளர்கள் பெற்றுக்கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால்

சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

KANTHAKUMAR Digitally signed by KANTHAKUMAR

**நில ஆர்ஜித கோருரிமை தீர்ப்பாயர்/**
**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**விருதுநகர் மாவட்டம்(இ),**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**<u>கோருரிமையாளர்கள் தரப்பு சாட்சிகள்</u>:–**

| | |
|---|---|
| கோ.சா.1 | திரு,ரெங்கராஜன் |
| கோ.சா.2 | திருமதி.ராஜம் |
| கோ.சா.3 | திருமதி.சூடிக்கொடுத்தாள் |
| கோ.சா.4 | திருமதி.சீதாலெட்சுமி |
| கோ.சா.5 | திரு.சீதாராமன் |
| கோ.சா.6 | திருமதி.மங்கை காசிபெருமாள் |
| கோ.சா.7 | திரு.தனசேகர் |
| கோ.சா.8 | திரு.ராமானுஜம் |
| கோ.சா.9 | திரு.நவநீதகிருஷ்ணன் |
| கோ.சா.10 | திரு.கண்ணன் |
| கோ.சா.11 | திருமதி.அனுராதா |
| கோ.சா.12 | திருமதி.தனலட்சுமி |
| கோ.சா.13 | திரு.வெங்கட்ராஜன் |
| கோ.சா.14 | திருமதி.சந்திரிகா |
| கோ.சா.15 | திரு.ரமேஷ் |

| | |
|---|---|
| | |

**<u>கோருரிமையாளர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>:–**

| | | |
|---|---|---|
| கோ.சா.ஆ.1 | 15.06.1965 | மனு தபசில் சொத்துக்களுக்கு ஆழ்வார்சாமி நாயக்கர் பெயருக்கு வழங்கப்பட்ட பட்டா எண்.50 (சான்றிட்ட நகல்) |
| கோ.சா.ஆ.2 | --- | மனு தபசில் சொத்துக்களுக்கு 1962 முதல் 1985 ஆம் ஆண்டு வரை ஆழ்வார்சாமி நாயக்கர் செலுத்திய தீர்வை ரசீதுகள் (சான்றிட்ட நகல்) |
| கோ.சா.ஆ.3 | --- | மனு தபசில் சொத்துக்களுக்கு நிலவுடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஆழ்வார்சாமி நாயக்கர் பெயருக்கு வழங்கப்பட்ட பட்டா எண்.48 (சான்றிட்ட நகல்) |
| கோ.சா.ஆ.4 | --- | மனு தபசில் சொத்துக்களுக்கு 1985 ஆம் ஆண்டு பின்பு ஆழ்வார்சாமி நாயக்கர் செலுத்திய தீர்வை ரசீதுகள் (சான்றிட்ட நகல்) |
| கோ.சா.ஆ.5 | 09.02.1988 | மனு தபசில் சொத்துக்களுக்கு சாத்தூர் தாலுகா E.குமாரலிங்கபுரம் கிராம நிர்வாக அதிகாரி வழங்கிய செட்டில்மெண்ட் ஜமாபந்தி சிட்டா (சான்றிட்ட நகல்) |
| கோ.சா.ஆ.6 | 06.12.2020 | மனு தபசில் சொத்துக்களுக்கு ஆழ்வார்சாமி நாயக்கர் பெயரில் உள்ள UDR பட்டா எண்.48 (சான்றிட்ட நகல்) |
| கோ.சா.ஆ.7 | 12.03.2020 | மனு தபசில் சொத்துக்களுக்கு ஆழ்வார்சாமி நாயக்கர் பெயரில் உள்ள அ பதிவேடு எண்ணம் 2 (கணினி வழி நகல்) |
| கோ.சா.ஆ.8 | 14.02.1994 | ஆழ்வார்சாமி நாயக்கரின் இறப்பு |

| | | |
|---|---|---|
| | | சான்றிதழ் (சான்றிட்ட நகல்) |
| கோ.சா.ஆ.9 | 18.01.2018 | வெங்கடபதி நாயக்கரின் இறப்பு சான்றிதழ் (சான்றிட்ட நகல்) |
| கோ.சா.ஆ.10 | --- | வெங்கடபதி நாயக்கரின் வாரிசு சான்றிதழ் (சான்றிட்ட நகல்) |
| கோ.சா.ஆ.11 | 02.04.2015 | சுப்புலெட்சுமியின் இறப்பு சான்றிதழ் (சான்றிட்ட நகல்) |
| கோ.சா.ஆ.12 | 16.09.2019 | காசிபெருமாளின் இறப்பு சான்றிதழ் (சான்றிட்ட நகல்) |
| கோ.சா.ஆ.13 | --- | காசிபெருமாளின் வாரிசு சான்றிதழ் (சான்றிட்ட நகல்) |
| கோ.சா.ஆ.14 | 05.9.2009 | சந்தன கோபாலகிருஷ்ணன் இறப்பு சான்றிதழ் (சான்றிட்ட நகல்) |
| கோ.சா.ஆ.15 | --- | சந்தன கோபாலகிருஷ்ணன் வாரிசு சான்றிதழ் (சான்றிட்ட நகல்) |
| கோ.சா.ஆ.16 | 26.07.2018 | சடகோபாலன் இறப்பு சான்றிதழ் (சான்றிட்ட நகல்) |
| கோ.சா.ஆ.17 | --- | சடகோபாலன் வாரிசு சான்றிதழ் (சான்றிட்ட நகல்) |
| கோ.சா.ஆ.18 | 02.09.2019 | துளசியம்மாள் இறப்பு சான்றிதழ் (சான்றிட்ட நகல்) |
| கோ.சா.ஆ.19 | 07.03.2018 | சீனியம்மாள் இறப்பு சான்றிதழ் (சான்றிட்ட நகல்) |
| கோ.சா.ஆ.20 | --- | சீனியம்மாள் வாரிசு சான்றிதழ் (சான்றிட்ட நகல்) |
| கோ.சா.ஆ.21 | 07.01.2012 | கோவிந்தசாமியின் இறப்பு சான்றிதழ் (சான்றிட்ட நகல்) |
| கோ.சா.ஆ.22 | 26.4.2024 | சாத்தூர் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்ற எண்.1ல் அசல் வழக்கு எண்.95/2023 வழக்கின் தீர்ப்புரை (சான்றிட்ட நகல்) |

| | | |
|---|---|---|
| கோ.சா.ஆ.23 | 26.4.2024 | சாத்தூர் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்ற எண்.1ல் அசல் வழக்கு எண்.95/2023 வழக்கின் தீர்ப்பாணை (சான்றிட்ட நகல்) |
| கோ.சா.ஆ.24 | --- | இறந்துபோன ஆழ்வார்சாமியின் வாரிசு சான்றிதழ் (சான்றிட்ட நகல்) |
| கோ.சா.ஆ.25 | --- | குடும்ப கொடிவழி ஜாபிதா (சான்றிட்ட நகல்) |
| கோ.சா.ஆ.26 | --- | 1ம் கோருரிமையாளரின் ஆதார் அட்டை நகல் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>:-**

| | |
|---|---|
| எ.ம.சா.1 | திரு.சுந்தரமூர்த்தி, தனி வட்டாட்சியர் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>:-**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | ---- | அ பதிவேடு |
| எ.ம.சா.ஆ.2 | 05.03.2021 | தீர்வம் |

KANTHAKUMAR Digitally signed by KANTHAKUMAR

**நில ஆர்ஜித கோருரிமை தீர்ப்பாயர்/**

**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**

**விருதுநகர் மாவட்டம்(இ),**

**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.
L.A.O.P.No.581/2022
சீரான/வரைவு – உத்தரவு
18.06.2026